THE RAMARAJU SURGICAL COTTON MILLS LIMITED

Manufacturers of Antiseptic Dressings

F.No. CS /2024-25_89 **14th November, 2024**

To,
Head-Listing,
Metropolitan Stock Exchange of India Limited
Building A, Unit 205A, 2nd Floor,
Piramal Agastya Corporate Park,
L.B.S Road, Kurla West, Mumbai - 400 070.

Symbol: RAMARAJU

Dear Sir,

Sub: Publication of Financial Results

In compliance with the provisions of Regulation 47 and other applicable provisions of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we enclose herewith the copy of advertisement published on 13th November, 2024 in newspapers viz. Business Line (English) and Makkal Kural (Tamil) informing the Unaudited Financial Results for the quarter and half year ended 30th September, 2024.

This is for your kind information and records.

Thanking you,

Yours faithfully,

For The Ramaraju Surgical Cotton Mills Limited,

THE RAMARAJU SURGICAL COTTON MILLS LIMITED
RAJAPALAYAM

P. Muthukumar
Company Secretary & Compliance Officer
Mem.No.: F12904

Encl: a/a

surgicom
P.O. Box : 2, 119, 120, P.A.C. Ramasamy Raja Salai, Rajapalayam - 626117. Virudhunagar District. Tamilnadu, India.
Ph (O) 91-4563-235904; E-mail: rscm@ramcotex.com; Web: www.ramarajusurgical.com
CIN : L17111TN1939PLCO02302 GSTIN : 33 AAACT4 3O8D1ZX

Merger with Vistara will result in AI expanding its global footprint

THE IMPACT. Presence on long-haul routes will be strengthened

Rohit Vaid
New Delhi

The Tata Group promoted Air India will be able to boast of an expanded international presence as a result of its merger with Vistara.

The merger will strengthen the airline's presence on critical long-haul routes and open new destinations like Bali and Mauritius.

Speaking to *businessline,* airline representatives said that post-merger Air India will have a presence in over 40 overseas destinations.

FLIGHT OPERATIONS

At present, Air India operates to 35 international destinations while Vistara flies in and out of 18 overseas airports.

Excluding the operations to the same destinations, the combined entity will operate to just over 40 ports of call, ranging from the continental United States to Australia. Besides, Air India will dom-

inate on certain flight routes to the United States, the United Kingdom, Europe, and Australia.

HIGH DEMAND ROUTES

Notably, Air India's substantial presence on these high-demand routes will offer enhanced connectivity between Indian cities and metropolises like London, Frankfurt, Paris and New York. Last year, Air India ferried over 10 million international passengers, and Vistara carried nearly three million to and from overseas destinations.

The combined network will also enable Air India to offer more direct flights and convenient connections, making it the carrier of choice for both business and leisure travellers.

Further, by adjusting frequencies to these major cities, the airline will be able to open routes to several global destinations over the next few months.

Among the new cities that are likely to see Air India flights are Manila, Jakarta, Los Angeles, Dallas and Seattle.

Flights to these cities, said an airline official, are subject to aircraft and airport slot availability.

WIDEBODY AIRCRAFT

Air India will get its hands on some widebody aircraft that are in service with Vistara, such as the 787 and A321neo. Presently, Air India has 60 widebody aircraft, such as the Airbus A350, Boeing 777s, and Boeing 787s. On its part, Vistara has seven widebody, medium- to long-range planes.

In addition, the induction of Vistara's aircraft assumes significance in maintaining Air India's current global network as the airline will begin to retrofit its Boeing 777s.

Rupee takes a hit as Trump's victory boosts dollar

Gurumurthy K
bl. research bureau

The rupee witnessed a sharp fall below 84.1 last week. The trigger for the fall came from the US Presidential election. The US dollar index strengthening after Donald Trump's victory in the election dragged the rupee lower. The index spiked to a high of 105.5 from around 103.3 as the election results were declared.

WEEKLY RUPEE VIEW.

The rupee fell to a new low of 84.41 on Tuesday before closing the day at 84.39.

However, the chances are high for the rupee to get some breather in the short term after some more fall.

The dollar index coming close to a crucial resistance could provide some support for the rupee going forward.

DOLLAR OUTLOOK

The US dollar index (105.83) has a strong resistance around 106. If it manages to breach this hurdle, the chances are high for the recent rally in the greenback to find a top anywhere in the 106-107 zone. A reversal from this resistance zone and a fall below 105.5 will drag the index down to 104 and even lower.

That, in turn, can aid the rupee to see some recovery. So, for now, the downside in the rupee could be limited.

RUPEE OUTLOOK

Rupee has room to test 84.5 from here. Continuous selling by Foreign Portfolio Investors (FPIs) can continue to weigh on the rupee. So far, there has been a net outflow of $2.77 billion for the month of November.

However, as seen from the chart, 84.5 is a strong support for the rupee. As such, a break below 84.5 might not happen immediately. So, we see high chances for the rupee to recover from around 84.5 towards 84.3.

A break above 84.3, which also looks highly possible, can take the rupee up to 84.2-84.1. So, broadly the path for the rupee could be to fall to 84.5 first and then recover towards 84.2-84.15.

'Amid US-China tensions, India better placed than Asian peers'

Our Bureau
Mumbai

India is not immune but is relatively better placed amongst its Asian peers in the event of heightened tensions between China and the US, according to a DBS Bank economic research report. However, the RBI's easing cycle could be delayed. Asia ex-China economies are likely to feel the heat from the US election results, contingent on the degree of trade and investment linkages with both counterparties — the US and China, per the report. Radhika Rao, Senior Economist - Executive Director (Group Research), DBS Bank, assessed that the first line of impact will be the pass-through of financial market volatility, with sharp swings in UST (US Treasury) yields as well as the dollar likely to pile pressure on Indian assets/flows.

NEW LOWS

While the relatively low beta of rupee bonds to USD moves will shield part of the impact, the rupee has hit new lows in the past week on the back of the post-election USD rally. "With the CNY (Chinese Yuan) assuming the largest weight in India's total trade basket, authorities are likely to align rupee's movements to the yuan as well. Heightened market volatility might also lead the RBI to prioritise financial stability and guard against imported inflation, delaying its easing cycle," Rao said. On the real economy front, a hostile geopolitical environment, inward looking trade policies and consequent deceleration in global trade/investment activity will impact Asia's growth ambitions, per her assessment.

எடப்பாடியாருக்கு சவால் விடும் அளவிற்கு உதயநிதிக்கு அனுபவம் தகுதி இன்னும் வரவில்ல: ஆர்.பி.உதயகுமார் கடும் தாக்கு

மதுரை நவ 13

சட்டமன்ற எதிர்க்கட்சித் துணை ஆர்.பி.உதயகுமார் கூறியதாவது;

மாவட்டங்கள்தோறும் ஆய்வுக் கூட்டம் என்கிற பெயரிலே முதலமைச்சர் போட்டோ ஷூட், ரோடு ஷோ ஆகியவற்றை நடத்தி வருவது தமிழக மக்களுக்கு பலன் தரவில்லை. இதுகுறித்து எடப்பாடியார் மக்களுக்காக கேள்விகளை அரசிடம் முன் வைக்கின்ற போது அதை கவனத்தில் எடுத்து செயல்படுத்த வேண்டுமே தவிர, எள்ளி நகையாடுவதும் வரம்பு மீறி பேசுவதும், நாகரீக அரசியலுக்கு ஏற்றவையாக இருக்காது. எதிர்கட்சித்தலைவர் எடப்பாடியார் ஆதாரத்தோடு சொல்லுகிற அந்த குற்றச்சாட்டுகளை எல்லாம் பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுகிறார் என்று, மக்களுக்கு திசை திருப்புகிற அந்த அக்கறை தான் செலுத்துகிறார்கள் தவிர ,அதை மக்களுக்காக தீர்வு காண்பதற்கான அக்கறை செலுத்தவில்லை என்பதுதான் இப்போது மக்கள் அரசின் மீது வைக்கின்ற குற்றச்சாட்டு.

எடப்பாடியார் என்ன சொன்னார்கள் அரசு செலவிலே,அரசு பங்களிப்பிலே செயல்படுகின்ற அந்த திட்டங்களுக்கு நீங்கள் தொடர்ந்து உங்கள் தந்தையார் பெயரை சூட்டுகிறீர்கள், உங்கள் டிரஸ்டின் மூலமாக திட்டங்களுக்கு கருணாநிதி பெயரை வைக்க ஆட்சபனை இல்லை, ஆனால் மக்கள் வரிபணத்தில் உங்கள்

தந்தையார் பெயரை இன்றைக்கு நீங்கள் தொடர்ந்து சூட்டுவதால் மக்கள் முகம் சுளிக்கிறார்கள் என்று மக்களின் எண்ணத்தை எடப்பாடியார் கேள்வியாக கேட்டு உள்ளார். எடப்பாடியார் முன்வைத்த அந்த கோரிக்கைகளுக்கு எல்லாம் பதில் சொல்வதற்கு திக்கி திணறி போன முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், எடப்பாடியாரை பார்த்து உங்களுக்கு என்ன திறமை இருக்கிறது என்று ஒரு தரம் தாழ்ந்த கேள்வியை கேட்கிற போது? அதற்கு எடப்பாடியார் நான் கடந்த நான்கரை ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்து மக்களுக்கு செய்த திட்டங்களான ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகள், 6 புதிய மாவட்டங்கள், குடிநீர் திட்ட பணிகள், கால்நடை பூங்காக்கள், சாலை பணிகள்,7.5 சகவீத இட ஒதுக்கீடு, குடிமராமத்து திட்டங்கள், 50 ஆண்டுகால காவேரி பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு, மேட்டூர் அணை தூர் வாருதல்,

அம்மா திட்டங்களான தாலிக்கு தங்கம் திட்டம்,கிராமப்புறம் மேன்மைஅடைய கறவை மாடுகள் ஆடுகள் திட்டம், மடிக்கணினி திட்டம், தடுப்பணைகட்டி அதன் மூலம் நீர்நிலை உயர்வு, உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை புள்ளி விவரத்துடன் எல்லாம் வரிசைப்படுத்தி என்னால் துண்டு சீட்டு இல்லாமல் குறிப்பு இல்லாமல் என்னால் பேச முடியும், முதலமைச்சர் செய்த திட்டங்களை பேச தயாரா?என்று சவால் விடுத்தார்.ஆனால் இன்றைக்கு உதயநிதி ஸ்டாலின் எடப்பாடியாரை பார்த்து சவால் விடுகிறார், ரெண்டு கோடி தொண்டர்கள் சார்பில் நான் உதயநிதி ஸ்டாலினுக்கு சவால் விடுகிறேன். முதலமைச்சர் ஸ்டாலின் மகனான உங்களோடு விவாதிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் நீங்கள் எந்த இடத்திற்கு அழைத்தாலும் நாங்கள் தயார்.இந்த நாட்டிலே நடைபெறுகிற சட்டம் ஒழுங்கு பிரச்சனை, போதைப் பொருள் கடத்தல், மின்சார கட்டணம் உயர்வு, சொத்துவரி உயர்வு, என மக்கள் வடிக்கிற கண்ணீரை துடைப்பதற்கு நீங்கள் எந்த முயற்சி எடுக்கவில்லை?

உங்கள் தந்தையார் கருணாநிதிக்கு மகனாக பிறந்த காரணத்தால் முதலமைச்சராகவும், கருணாநிதியின் பேரனாக பிறந்த ஒரே காரணத்தினாலே நீங்கள் துணை முதலமைச்சராகி இன்றைக்கு நீங்கள் சவால் விடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

கருணாநிதிக்கு பேரன் என்ற நிலை இல்லாமல் இருந்தால்,ஒரு கவுன்சிலர் தேர்தலில் கூட நீங்கள் வெற்றி பெற முடியாது என்று கோடிக்கணக்கான மக்களின் உணர்வுகளை பட்டவர்த்தமாக வெளிச்சம் போட்டு காட்டி உங்கள் முகத்திரையை ஒற்றை வரியில் தோலுரித்துக் காட்டியுள்ளார் எடப்பாடியார் எடப்பாடியாருக்கு சவால் விடும் அளவிற்கு உதயநிதிக்கு தகுதியும், அனுபவம் இன்னும் வரவில்லை சவால் விடுவது என்பது முக்கியமில்லை மக்களை காப்பது தான் முக்கியம் என்பதை உதயநிதி நினைவில் கொண்டு பணியாற்ற வேண்டும் என கூறினார்.

சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் பள்ளியில்

திண்டுக்கல் மாவட்ட அளவிலான சப்ஜூனியர் மாணவ, மாணவியர்களுக்கான ஹேண்ட்பால் போட்டிகளுக்கான அணித்தேர்வு

சின்னாளபட்டி, நவ.14

சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் திண்டுக்கல் மாவட்ட அளவிலான சப்ஜூனியர் மாணவ மாணவியர்களுக்கான ஹேண்ட்பால் போட்டிகளுக்கான அணித்தேர்வு 2024 -25 நடைபெற உள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வருகின்ற நவம்பர் 23 மற்றும் 24ம் தேதிகளில் மாணவ மாணவியர்களுக்கான மாநில அளவிலான ஹேண்ட்பால் போட்டிகள் திருவண்ணாமலையில் நடைபெற உள்ளது. இதற்கு

திண்டுக்கல் மாவட்ட அளவிலான மாணவ மாணவிகளின் அணித்தேர்வு வருகின்ற 15.11.2024ம் தேதி சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெற உள்ளது என்பதை திண்டுக்கல் மாவட்ட ஹேண்ட்பால் அசோசியேசன் செயலாளர் எம்.சிவக்குமார் அறிவித்துள்ளார். ஹேண்ட்பால் போட்டியில் பங்கேற்கும் மாணவ மாணவிகள் ஹேண்ட்பால் பயிற்சியாளர் என்.அசோக்குமார் அவர்களை செல் எண் 9629922596 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு போட்டிகள் குறித்த விபரங்களை தெரிந்து கொள்ளலாம். இந்த போட்டிகளில் பங்கேற்றும் மாணவ மாணவிகள் 01.01.2010 தேதிக்கு பின் பிறந்த மாணவமாணவிகள் மட்டுமே பங்கேற்க முடியும் என்பதை திண்டுக்கல் மாவட்ட ஹேண்ட்பால் அசோசியேசன் நிர்வாகம் அறிவித்துள்ளது.

விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்த விவசாயிகளுக்கு பயிற்சி

புதுக்கோட்டை, நவ.13-

எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் காபி இணைந்து நடத்திய விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்துதல் பற்றிய பங்காளர்களுக்கான பயிற்சி புதுக்கோட்டை எம் ஏ கிராண்ட் விடுதி கூட்ட அறையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி ஆர். ராஜ்குமார் தலைமை வகித்தார்.

புதுக்கோட்டை நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் ஆர். தீபக் குமார் பயிற்சி முகாமை துவக்கி வைத்து உரையாற்றினார். அவர் பேசுகையில் விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி விவசாயிகளுக்கு தேவையான சரியான தகவல்களை வழங்குவது முக்கியத்துவம் பெற்று வருகிறது, ஆனால் விவசாயத்தில் அதிகமாக ஈடுபட்டுள்ள சிறு, குறு விவசாயிகள் பயன்படுத்துகின்ற வகையில் செயற்கை நுண்ணறிவு மூலம் பெறப்படும் தகவல்கள் அமைய வேண்டும். விவசாயத்தில் பல்வேறு நில அமைப்புகள், இடத்திற்கு இடம் வேறுபட்ட பிரச்சனைகள் உள்ளது, இது போன்ற தகவல் தொழில்நுட்பங்கள் இவைகளை பூர்த்தி செய்கின்ற வகையில் இருக்க வேண்டும், அந்த வகையில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பல்வேறு அரசு அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், உழவர் உற்பத்தியாளர்கள் குழுக்கள், விவசாயிகள், பயிர் மருத்துவர்கள் உள்ளடக்கிய இந்த கலந்துரையாடல் பயிற்சி அனைத்து தரப்பு விவசாயிகளுக்கும் பயனுள்ள விவரங்களை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் வழங்க உதவியாக இருக்கும் என்றார். கேபி நிறுவன பயிர் நல அலுவலர் ஆர். கணேசமூர்த்தி செயற்கை நுண்ணறிவு தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்து வதற்கான பயிற்சி அளித்தார்.

ஏற்கனவே தயாரித்த தகவல்கள் எவ்வாறு விவசாயிகளுக்கு பயனுள்ளதாக உள்ளது என பரிசோதனை செய்து மேம்படுத்த வேண்டிய விவரங்களை கேட்டறிந்தார். நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் எஸ்.முகமது ரஃபீ, திருச்சி கிரியா நிறுவன அலுவலர் கே. சி. சிவபாலன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இப்பயிற்சியில் வேளாண்மை துறை அலுவலர்கள், தன்னார்வ தொண்டு பிரதிநிதிகள், உழவர் உற்பத்தியாளர் குழு பிரதிநிதிகள், விவசாயிகள், இடுப்பொருட்கள் விற்பனையாளர்கள், விவசாய கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்ட 50 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானி பி.மணிகண்டன் அனைவரையும் வரவேற்றார். நிறைவாக கள அலுவலர் டி.விமலா நன்றி கூறினார்.

மதுரையில் மகளிர் குழுக்களை மிரட்டி பணம் பறிக்கும் கும்பல்: நடவடிக்கை எடுக்க கோரி கலெக்டரிடம் மனு

மதுரை, நவ.13-

மதுரையில் மகளிர் குழுவினரை மிரட்டி பணம் பறிக்கும் போலி என்.ஜி.ஓ ஏஜெண்டுகள் மீது நடவடிக்கை எடுக்க கோரி கலெக்டரிடம் மனு அளித்தனர்.

இது பற்றி கலெக்டரிடம் மனு அளித்த மகளிர் குழுவைச் சேர்ந்த ரத்தினம் கூறியதாவது, நாங்கள் நடத்தி வரும் ரயனா, இரட்டை விநாயகர், தங்க புஷ்பம், வளர்பிறை, சாய்பாபா போன்ற மகளிர் குழுக்களின் மீது பொய்யான தவறான தகவல்களை கே.புதூரை

சேர்ந்த, என்.ஜி.ஓ.க்கள் என கூறிக் கொண்டு போலி ஏஜெண்டுகளாக செயல்படும் உஷா, உஷாவின் கணவர் ஐசக், புவனேஸ்வரி, எச்.எம்.எஸ் காலனியை சேர்ந்த கௌரி, சேர்மலட்சுமி மற்றும் இவர்களுக்கு உதவி செய்து வரும் ஆடிட்டர் பி.பி.குளத்தைச் சேர்ந்த சுதர்சன் ஆகியோர் எங்களது குழுக்கள் மீது பொய்யான தகவல்களை பரப்பி எங்களுக்கு லோன் கிடைக்க விடாமல் செய்து வருகின்றனர். அது மட்டுமல்லாமல் மிரட்டி பணம் கேட்டு நூதன முறையில் மோசடி செய்து வருகின்றனர். இவர்கள் மீது கலெக்டர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் வியாபார நோக்கத்துடன் உரிய அனுமதி பெறாத என்.ஜி.ஓ மற்றும் என்.ஜி.ஓ ஏஜெண்டாக செயல்படும் இவர்கள் அனுமதி பெற்ற என்.ஜி.ஓ.க்களான எங்களுக்கு லோன் பெற்றுத் தரும் நேர்மையான அதிகாரிகள், சமூக அமைப்பாளர்களை மிரட்டி வருகின்றனர். இது சம்பந்தமாக நாங்கள் எஸ்.எஸ். காலணி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளோம். அந்த புகாரின் அடிப்படையில் அவர்கள் மீது எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே இவர்கள் மீது மாவட்ட ஆட்சியர் கடுமையான நடவடிக்கை எடுத்து எங்களின் வாழ்வாதாரமான மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு கடன் கிடைக்க செய்ய வேண்டும் என்று புகாரில் கூறியுள்ளனர்.

வத்தலக்குண்டுவில் கோலாட்ட பசுவன் ஜோத்திரை வழிபாடு

வத்தலகுண்டு, நவ.13-

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அக்கிரகாரத்தில், பசுவன் ஜோத்திரை வழிபாடு கடந்த பத்து தினங்களாக நடைபெற்றது. உலக நன்மை வேண்டி பாரம்பரிய கோலாட்ட பசுவன் ஜோத்திரை வழிபாடு நடைபெற்றது. முன்னதாக தீபாவளி அன்று அம்மாவாசையையொட்டி பசுமடத்தில் துவங்கிய பசுவன் ஜோத்திரை வழிபாடானது, விவசாயம் பெருகவும், மழைவளம் சிறக்கவும் கால்நடைகள் பெருகவும் இந்த வழிபாடு முக்கியமானது ஆகும். உலக மக்கள் நோய் நொடி இல்லாமல் வாழவும் ஜோத்திரை வழிபாடு நடைபெற்றது. களிமண்ணால் பசுவன் உருவாக்கம் செய்து முளைப்பாரியுடன் இந்த ஜோத்திரை வழிபாடு செய்வார்கள்.

தேவதை வழிபாடு என கூறப்படும் இந்த வழிபாடு, நானூறு ஆண்டுகளாக தொடர்ந்து வழிபாடு செய்து வருகின்றனர். இந்தவழிபாட்டில்பெண்கள்கோலாட்டம், கும்மி பாடல்கள் பாடி, கோலாட்டம் ஆடி கொண்டாடுவார்கள். பின்பு கந்த சஷ்டி முடிந்த பின் பத்தாம்நாளில், பசுவன் ஜோத்திரை ஊர்வலம் சங்கரன் தலைமையில் நடைபெற்றது. வத்தலக்குண்டு அக்கிரகாரம் அமைந்துள்ள நடுத்தெரு, கோவில்தெரு பகுதிகளில் கோலாட்டத்துடன் பசுவன் ஜோத்திரை ஊர்வலம் வந்து நிறைவடைந்தது. பசுவன் ஊர்வலமாக வர, பாலிகையுடன் வழி நெடுகிலும் பெண்கள் கோலாட்டம் அடித்து ஆடி, வாணவேடிக்கையுடன் இறைவனின் தோத்திரப் பாடல்களை பாடி சென்றனர். பின்னர் பசுவன் நந்தி தேவர் பரிவார தெய்வங்களையும் முளைப்பாரியை மஞ்சளாற்றில் கொண்டு கரைத்தனர். பசுவன் ஜோத்திரை யாத்திரை நிறைவு பெற்றதும் கலந்து கொண்ட பக்தர்கள் மற்றும், பொதுமக்களுக்கு அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்காக வெளியூரில் இருக்கும் மக்களும் தங்கள் சொந்த ஊரில் சங்கமத்து இந்த ஜோத்திரை வழிபாட்டில் கலந்து கொண்டனர். இந்த ஜோத்திரை வழிபாடு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய சங்கரன் கூறும் போது, இந்த வழிபாடு இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டுவது ஆகும் குறிப்பாக தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பொய்த்து போகாமல் இருக்க இந்த பசுவன் ஜோத்திரை வழிபாடு நடத்தப்படுகின்றது. வடகிழக்கு பருவமழையால் தமிழ்நாட்டில் விவசாயம் செழிக்க இந்த வழிபாடு நடத்தப்படுவதாக தெரிவித்தார்.

வைகை ஆற்றில் 177 இடங்களில் நேரடியாக கலக்கும் கழிவு நீர்

மதுரை, நவ.13-

வைகை ஆற்றில் 177 இடங்களில் கழிவு நீர் நேரடியாகக் கலக்கிறது அதனால் ஆற்றின் குடிநீருக்கு மட்டுமின்றி தாவரங்கள், விலங்குகள், பறவைகள், மீன்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என மதுரை ஆட்சியரிடம் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வழங்கிய ஆய்வு அறிக்கையில் அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. மதுரை சித்திரைத் திருவிழா முதல் கிராமங்களில் நடக்கும் சடங்குகள் வரை இன்றும் வைகையாற்று நிரை சார்ந்து நடக்கின்றன. சங்க இலக்கியங்களால் புகழப்பட்ட வைகை ஆறு. தற்போது ஆக்கிரமிப்புகளால் சுருங்கி மணல் முழுவதும் அள்ளப்பட்டு விட்டதால் கழிவுநீர் தேக்கம் போல் காணப்படுகிறது. தேனி முதல் ராமநாதபுரம் வரை யிலான வைகை ஆற்றில் 177 இடங்களில் கழிவுநீர் நேரடியாக கலக்கிறது. ஆற்றில் வாழும் மீன்கள், விலங்குகள், தாவரங்களுக்கும். குடிநீர் ஆதாரத்துக்கும் ஆபத்து நேர்ந்துள்ளதாக, இந்த ஆற்றை ஆய்வு செய்த மதுரை இயற்கை பண்பாட்டு அகைநீ அறக்கட்டளையின் நிர்வாகிகளும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களுமான ரவீந்திரன், விஸ்வநாத், கார்த்திகேயன், தமிழ்தாசன் ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர் இவர்கள் கடந்த ஆகஸ்ட் 28ம் தேதி முதல் செப்டம்பர் 6ம் தேதி வரை தேனி மாவட்டம் மூலவைகையில் வாலிப்பாறை அருகே தொடங்கி வைகையாறு கடலில் கலக்கும் கழிமுக பகுதியான ராமநாதபுரம் மாவட்டம் ஆற்றாங்கரை ஊராட்சி வரை 200 கிராமங்களில் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வு அறிக்கையை மதுரை ஆட்சியர சங்கீதாவிடம் வழங்கியுள்ளனர்.

அகில பாரத 'வீரமங்கை' வடிவுமள்ளத்தி மகளிர் அதிகார அமைப்பு சார்பில் ராஜராஜசோழன் சிலைக்கு மாலை அணிவிப்பு

மதுரை, நவ.13-

மதுரையை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் அகில பாரத "வீரமங்கை" வடிவுமள்ளத்தி மகளிர் அதிகார அமைப்பின் நிறுவனர் முனைவர் போதிலெட்சுமி, அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு தேவேந்திரகுல மத்திய மாநில அரசு ஊழியர்கள் சங்க நிர்வாகிகள் ஆகியோர் தமிழகத்தை ஆண்ட 'தமிழ் மன்னன்' ராஜராஜசோழனின் 1039 சதய விழாவில் பங்கேற்று, தஞ்சை ராஜராஜன் மணி மண்டபத்தில்

உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் அமைப்பு மற்றும் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் என 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

சிட்பண்ட், சீட்டு கம்பெனிகள் பற்றி பொதுமக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் என்ன?

நத்தம், நவ.13-

திண்டுக்கல் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சிட்பண்ட் நிறுவனங்கள் திடீரென உருவாகி பொதுமக்களுக்கு கவர்ச்சிகரமான சலுகை களை அறிவிக்கின்றனர். இதை நம்பி பெரும்பாலோர் பணத்தை ஏமாறும் நிலைமையே தொடர்கிறது.

மேலும் சிட்பண்ட் நிறுவனங்களில் சேரும் பொதுமக்கள் அந்த நிறுவன ங்களிடம் தங்களுக்கு தேவையான ஆதாரங்களை கேட்பதில்லை. இது குறித்து நாகசிவா சிட்பண்ட் பிரைவேட் லிமிடேட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் நாகராஜ் பெரியசாமி கூறியதாவது:-

புதிய சிட்பண்ட் நிறுவனத்தில் சேறும் பொதுமக்களுடன் 1982 சட்டத்தின்படி ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஒப்பந்த பத்திரம் வழங்க வேண்டும்.

மேலும் குழுவை அரசு அங்கீகரித்தற்கான நகலை ஒவ்வொருவருக்கும் வழங்க வேண்டும்; ஏலம் நடப்பதை இணையதளம் வாயிலாக நேரலையிலும் பார்ப்பதற்கான வசதி ஏற்படுத்தி தர வேண்டும்; எனவே சிட்பண்ட் நிறுவனத்தில் சேரும் பொதுமக்கள் மேலே கண்ட அனைத்தையும் செய்து கொடுக்கும்; நிறுவனங்களை தேர்வு செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.